அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 168.

எனது இல. 2/9/771(எச்)
அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு-7.
1980, யூலை மாதம் 22ஆந் தேதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரசாங்க யாக்கத் தலைவர்கள் யாவர்க்கும்.

வேலை நிறுத்தம்-1980, யூலை மாதம்-
பதவியை விட்டு நீங்கல்.

1980.07.18ஆந் தேதியன்று அலுவலகத்திற்கு வரத் தவறியமை காரணமாகப் பதவியை விட்டு நீங்கியவர்களாகி, தாம் வராதிருந்தமை வேலை நிறுத்த நடவடிக்கை காரணமாகவல்லாது தவிர்க்க முடியாத வேறு காரணங்களினாலாகுமென்பதற்கு நியாயமான காரணம் காட்ட முடியுமெனக் கோரியவர்கள் சம்பந்தமாகப் பின்வரும் நெறிப்படுத்துகைக் கோட்பாடுகள் அவதானிக்கப்படுதல் வேண்டும்.-

(1) முறையான மருத்துவச் சான்றிதழ்கள் சமர்ப்பித்ததன் பேரில் வராதிருந்தமை (வராதிருந்தமைக்குரிய சாட்டுக்களாகச் சமர்ப்பிக்கப் பெற்ற மருத்துவச் சான்றிதழ்கள் மிகுந்த கவனத்துடன் பரிசீத்துப் பார்க்கப்படுவதுடன், அச் சான்றிதழ்கள் குறித்து அற்ப சொற்ப ஐயமேனுமிருக்குமாயின், அது பற்றிக் குறித்த ஆளின் பழைய வரலாறு தொடர்பில் ஆய்ந்து பார்த்தலும் வேண்டும், அவசியமாயின் மீளச் செவ்வை பார்த்தலும் வேண்டும்.) நிறுவனமொன்றிலுள்ள குறிப்பிட்டவொரு வகுதியெதனினதும் தொடர்பில் பருமட்டான சோதனையாக வழமையில் பிணி லீவின் பேரில் அவ் வகுதியில் வராதிருக்கும் ஆட்களின் மொத்த எண்ணிக்கையைக் கொள்ளலாம். இப்போது சமர்ப்பிக்கப் பெறும் மருத்துவச் சான்றிதழ்களின் எண்ணிக்கையானது குறித்த நிறுவனத்தில் அவ் வகுதிக்குரிய சராசரி மருத்துவச் சான்றிதழ்களின் எண்ணிக்கையிலும் மிகையாக இருக்குமாயின், அது பற்றி ஆய்வு செய்தல் அவசியமாகும்;

(11) நிறுவனத் தலைவருக்கு அல்லது அதன் கிளைக்கு 1980.07.18ஆந் தேதியன்று உடனடியாக அறிவிக்கப் பெற்றதான சுகவீனம் அல்லது அது போன்ற காரணங்கள்;

(111) 1980.07.17ஆந் தேதிக்கு முன்னர் லீவு அனுமதிக்கப் பெற்றும், அத் தேதிக்கு முன்னர் லீவு ஆரம்பமாகியுமிருக்குமாயின், அத்தகு லீவில் நின்ற ஆட்கள். (இங்கு கூட சம்பந்தப்பட்ட ஆள் 1980.07.21ஆந் தேதியன்று கடமைக்குச் சமுகமளிக்க முயற்சித்தாரா வென்பது குறித்துச் செவ்வை பார்க்கப் பெறுதல் வேண்டும்);

(1V) அது போன்ற சூழ்நிலையில் வேலைக்கு வருவதினின்றும் அச்சுறுத்தப் பெற்றோம் அல்லது தடுக்கப் பெற்றோம் எனக் கோரியவர்கள், இவ் விடயங்களும் ஆய்ந்து பார்க்கப்படுதல் வேண்டும். இருப்பினும், அவர்கள் குறித்த வேலை நிறுத்தத்திற் கலந்து கொள்ளும் தொழிற் சமாசமொன்றின் உறுப்பினர்களாக விளங்குவார்களாயின், அச்சுறுத்தப்பட்டோமென்னும் சாட்டுக்கள் ஏற்றுக் கொள்ளப்படுதலாகாது.

02. அதற்கிணங்க நடவடிக்கை எடுக்குக.

ஒப்பமிட்டவர்: பி. ஐ. குணதுங்க.
பதிற் செயலாளர்,
அரசாங்கநிருவாக அமைச்சு.